# முன்னேஸ்வரத்தின் பெயர்ச்சிறப்பு

புராதன இலங்கையில் சிவவழிபாடு மேம்பட்டு விளங்கியது. சிவவழிபாட்டின் அடையாளமாக புராதன ஈச்சரங்கள் போற்றப்படுகின்றன. அவ்வகையில் இலங்கையில் முன்னேச்சரம், கேதீச்சரம்,கோணேச்சரம், நகுலேச்சரம் என்பனவும் இந்தியாவில் இராமேச்சரமும் விளங்குகின்றன.

இலங்கை சிவபூமி என அழைக்கப்படும் சிறப்புடையது. இலங்கையில் முதன்முதற் குடியேறியவர்கள் யார் என வரலாற்று ஆசிரியர்களால் அறிய முடியாதுள்ளது. எனினும் மஹாவம்சத்தின் குறிப்பின் படி இலங்கையின் வரலாறு வீஜயனின் வரலாற்றுடன் ஆரம்பமாகின்றது. அதன்படி பண்டைய இலங்கையில் இயக்கர் நாகர் எனும் இருபழங்குடிகள் வாழ்ந்திருந்தனர் என சரித்திர ஆராய்ச்சி நூல்கள் கூறுகின்றன.

இலங்கையில் வாழ்ந்த பூர்வீகக் குடிகள் இந்து சமயத்தையே பின்பற்றினர். இதற்கு சான்றாக இலங்கை புராணகாலத்தில் குபேரபூமி எனவும், இலங்கையை ஆண்ட இராவணன் சிறந்த சிவபக்தன் என்றும் குறிப்பும் இதற்கு சான்றுபகுகின்றது.

குபேரன், இராவணன், மண்டோதரி ஆகியோர் சிறந்த சிவபக்தி உடையவர்களாக திகழ்ந்தனர். இராவணனின் சிவ பக்தியை திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும், மண்டோதரியின் சிவபக்தியை மாணிக்கவாசக சுவாமிகளும் தேவார திருவாசகங்களில் சுட்டிக் காட்டியுள்ளனர். அதேபோல் இலங்கை வரலாற்றில் வியாசகர், அகஸ்தியர், மஹாதுவஷ்டா, இராவணன், இராமன், விபீஷணன் முதலானவர்களது குறிப்புக்கள் வரலற்றுக்கு முற்பட்ட இலங்கையின் சிவவழிபாட்டு பாரம்பரியங்களை இதிகாசங்களான இராமாயணம், மகாபாரதத்தோடும், சிவபுராணம், மத்ஸியபுராணம், ஸ்காந்தபுராணம் என்பனவற்றோடும் தொடர்புபடுத்திக் கூறுவனவாக அமைந்துள்ளன.

இத்தகைய சிறப்புடைய சிவபூமியாகிய இலங்கை வரலாற்றில் முன்னேஸ்வரம் தனித்துவம் பெறும் சிவஸ்தலமாக விளங்குகின்றது.

காலத்திற்கு காலம் முன்னேஸ்வரம் எனும் பெயர் முன்னேச்சரம், முன்னேசுவரம், முன்னேஸ்வரம், முன்னீஸ்வரம், முனீசுவரம், மொனேசுவரயோ என பல்வேறு மருவுப்பெயர்களால் அழைக்கப்பட்டதாக அமைகின்றது.

முன்னேஸ்வரம் எனும் பெயர் பல்வேறுபட்ட பொருட்களை உணர்த்துவதாக அமைந்து காணப்படுகின்றது. அதன்படி

1. முன்தோன்றிய ஈச்சரம் எனும் பெயரால் முனீஸ்வரம் என்று அழைக்கப்படுகின்றது.
2. பெயரறிய முனிவர்கள் வழிபட்டமையால் முனீஸ்வரம் என்று அழைக்கப்படுகின்றது.

3. முனிவர்களுக்கெல்லாம் பெருமுனியாகிய சிவபெருமானின் ஈஸ்வரம் என்பதால் முனீஸ்வரம் என்று அழைக்கப்படுகின்றது.
4. மிக நீண்ட காலம் பூஜிக்கப்பட்டமையால் முனீஸ்வரம் என்று அழைக்கப்படுகின்றது.
5. பிரம்மாவினால் முன்பு பூஜிக்கப்பட்டமையால் சிறப்புப் பெற்று முனீஸ்வரம் என்று அழைக்கப்படுகின்றது.
6. பஞ்ச ஈஸ்வரங்களான கேதீஸ்வரம், கோணேஸ்வரம், நகுலேஸ்வரம், இராமேஸ்வரம், முனீஸ்வரம் எனும் ஐந்து ஈஸ்வரங்களுள் காலத்தால் முந்தியது எனும் காரணத்தால் முன்னேஸ்வரம் என்று சிறப்புடன் அழைக்கப்கடுகின்றது

எனும் ஆறு சிறப்புகள் முன்னேஸ்வரம் எனும் பெயர்ச்சிறப்பிற்கு காரணமாக அமைகின்றன.

இத்தகைய பாரம்பரியமும் சிறப்பும் மிக்க முன்னேஸ்வரம் இலங்கையின் மேற்குக்கரையில் வடமேல் மாகாணத்தில் புத்தளம் மாவட்டத்தில் சிலாபம் நகரிற்கு கிழக்காக குருணாகல் வீதியில் இரண்டு கிலோமீற்றர் தொலைவில் அமைந்து விளங்குகின்றது. சிவாகம விதிப்படி சிவசக்தி ஐக்கிய ஸ்தலமாக சிவசக்தியாகிய ஸ்ரீ வடிவாம்பிகை அம்பாளுடன் ஸ்ரீ முன்னைநாத சுவாமி உலகின் படைப்பை உணர்த்தும் சிறப்புடன் விளங்குவதனைக் காணலாம்.

பூரம்மரியமான வரலாற்று மரபுகளையும், சிவாகம வழிபாட்டு முறைமைகளையும் கொண்டு விநாயகர் முதல் சண்டேஸ்வரர் வரையான பரிவார தெய்வங்களுடன் விளங்கும் சிறப்பினை காண முடிகின்றது.

இத்தகைய சிறப்பும் மகிமையும் பொருந்திய ஸ்ரீ முன்னைநாத சுவாமியையும், வடிவழகி அம்மையையும் வழிபட்டு வேண்டும் வரங்களைப் பெற்றுய்வோமாக!